பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை03 திங்கட்கிழமை 18.11.2024 கதிர் 011

# நாணய நிதியத்தின் குழு நேற்று வந்து சேர்ந்தது

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று, விரிவாக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான மூன்றாவது மீளாய்வுக்காக நேற்று இலங்கை வந்துள்ளது.

இவர்களின் பயணத்தின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் நான்காவது தவணை கடன் வசதி இலங்கைக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நான்கு வருட நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் மொத்த கடன் தொகை 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

முதல் தவணையான 333 மில்லியன் அமெரிக்க டொலர் 2023 மார்ச் 21, இரண்டாவது தவணையாக 337 மில்லியன் அமெரிக்க டொலர் அதே வருடம் டிசெம்பர் 13 இலங்கைக்கு விடுவிக்கப்பட்டது.

மூன்றாவதுகடன்தவணையாகஇவ்வருடம் ஜூன் 12 அன்று 336 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளதுடன், இதுவரையில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்றுக்கூடியபோது தேசியப் பட்டியலை நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை மாவை சேனாதிராசாவுக்கு வழங்க மறுத்துவிட்டது.

அந்த வாய்ப்பு தனக்குத் தரப்படவேண்டும் என்று மாவையர் மீண்டும் மீண்டும் இரந்து கேட்டார். ஆனால் அரசியல் குழு கருணை காட்டவில்லை. அவரின் வயது மூப்பைக் காரணம் காட்டி ☞ 2

## ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் சில திடீர் நிறுத்தம்

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்கு சொந்தமான 3 விமானங்களில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு காரணமாக சில விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் பல விமானங்கள் இரத்து செய்யப்படலாம் எனவும் ☞ 2

## இன்று காலை 10 மணிக்கு அமைச்சரவை பதவியேற்பு

புதிய அமைச்சரவை இன்று காலை 10 மணிக்கு பதவியேற்கவுள்ளது.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்த பதவியேற்பு நடைபெறவுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களும் இதன்போது பதவியேற்கவுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது சபை அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. 175 இற்கும் அதிகமான புதிய நாடாளுமன்ற ☞ 2

## தமிழ் அரசின் நாடாளுமன்றக்குழு தலைவராக சிறீதரன் எம்.பி. தெரிவு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக சிவஞானம் சிறிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற அந்தக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சிறீதரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில கருத்தியல் ரீதியான வேறுபாடுகளைக் களைந்து மன்னார் வவுனியா மாவட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்களையும் கருத்தில்கொண்டு தேசியப் பட்டியல் ஆசனத்தை வைத்தியர் சத்தியலிங்கத்திற்கு வழங்குவதற்கு தீர்மானம் எடுத்தோம். இந்த பிரதேசத்தில் வேறுவகையான ஆக்கிரமிப்புக்கள் இடம்பெறுவதையும் கருத்தில் கொண்டே ஒரு ஒத்த முடிவிற்கு வந்துள்ளோம்.

அத்துடன் 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் இலக்கின் அடிப்படையில் அனைவரையும் அரவணைத்துச் செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதில் அதிக கரிசனையும் விருப்பமும் எங்களுக்கு இருக்கிறது.

எனது தேர்தல் பரப்புரையிலும்கூட அந்த ஆணையை வழங்குமாறு மக்களிடம் கேட்டிருக்கிறேன். எனவே நாங்கள் ஒன்றாக பலமாக ☞ 2

## நுகர்வோர் அதிகார சபையின் விசாரணைத் தலைவர் நீக்கம்

நுகர்வோர் விவகார அதிகார சபையின் விசாரணைப் பிரிவின் தலைவர் நீக்கப்பட்டு, குறித்த பிரிவு கலைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் நுகர்வோர் விவகார அதிகார சபையில் சட்டத்திற்கு முரணான வகையில் விசாரணைப் பிரிவின் தலைவர் ஒருவரை நியமித்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அந்த பிரிவு கலைக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிதியமைச்சு மற்றும் முகாமைத்துவ ☞ 2



## புதிய அரசியல் கலாசாரத்துக்கு ஒத்துழைக்க ஹர்ஷ தீர்மானம்

நாட்டில் வடக்கு, தெற்கு மற்றும் மலையகம் என சகல மக்களும் அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதற்கான அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கியிருக்கின்றனர். மக்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய அரசியல் கலாசார மாற்றத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்க தீர்மானித்துள்ளதாக கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் நிறைவடைந்துள்ள நிலையில் தனக்கு வாக்களித்தவர்களுக்கு நன்றி கூறி வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: கடந்த தேர்தலைவிட இம்முறை ☞ 8

## எம்.பிக்களாகின்றனர் தினேஷ் மற்றும் ரவி

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னணியிலிருந்து மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இருவர் தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்படவுள்ளனர். இந்த முன்னணி ரவி கருணாநாயக்கவால் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொள்கை விளக்க உரை நேரத்தில் திடீர் மாற்றம்

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் தொடக்கத்தில் ஆளும்தரப்பின் கொள்கைப்பிரகடனம் 2024 நவம்பர் 21 மு.ப 11.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது முதலில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் என்று இருந்தது.

இந்தக் கொள்கைப் பிரகடன உரை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் ஆற்றப்படும். அரசமைப்பின் 33(அ) உறுப்புரையின் பிரகாரம் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒன்றின் ஆரம்பத்தில் ஆளும்தரப்பின் கொள்கைப் பிரகடனத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கும், அரசமைப்பின் 33 (ஆ) உறுப்புரையின் ☞ 2

## தமிழ் அரசின் தேசியப் பட்டியல் கட்சி செயலர் சத்தியலிங்கத்துக்கு

இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்தை சத்தியலிங்கத்திற்கு வழங்க கட்சியின் அரசியற்குழு தீர்மானித்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் வவுனியா ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

நடந்துமுடிந்த தேர்தலில் ☞ 2

## விடுமுறை இல்லாததால்
## 1 லட்சம் தனியார் ஊழியர்கள் வாக்களிக்க முடியாத பரிதாபம்

2024 நாடாளுமன்ற தேர்தலில் சுமார் 1 இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் விடுமுறை இல்லாததால் வாக்களிக்க முடியாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க கிட்டத்தட்ட 1 இலட்சம் தனியார்துறை ஊழியர்கள் விடுமுறை எடுக்கமுடியாமல் தவித்துள்ளனர் என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் ☞ 2

## தமிழர் தரப்புகள் ஒன்றிணையவேண்டும் படுதோல்வியின் பின்னர் மணி கருத்து

தமிழர் தரப்புக்கள் ஒன்றிணையவேண்டும். அதேவேளை நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ் தரப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டுப் படுதோல்வியடைந்த மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடதுசாரிகளுக்கு என பண்பியல்பு இருக்கிறது. அவர்கள் தமக்கு ஏற்றவாறு சட்டங்களை மாற்றி தமது ஆட்சியை தக்க வைத்துக்கொண்டிருப்பார்கள். இதனை உணர்ந்து கொண்டு தமிழர் தரப்பு ஒற்றுமைப்படவேண்டும். வடக்கையும் கிழக்கையும் பறிகொடுத்துவிட்டு, எங்கள் மீது திணிக்கப்பட போகும் தீர்வுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகளையும் தமிழர் தரப்பு பறிக்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இதனை உணர்ந்து ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அவரது கோரிக்கையை நிராகரித்துவிட்டது. அந்தப் பதவியைத் தனக்குத் தருமாறு கேட்ட கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகத்தின் கோரிக்கையையும் அதனடிப்படையில் நிராகரிக்கப்பட்டது.

70 வயதுக்கு மேற்பட்டவர்கள் நாடாளுமன்ற உறுப்புரிமையைக் கோருவது நியாயம் அல்ல என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம் கூட்டத்தில் அழுத்திக் கூறினார். அதனை ஏற்றுத் தனது கோரிக்கையைக் கைவிடுகிறார் என்று குலநாயகம் உடனடியாகவே அறிவித்தார். ஆனால் மாவையர் தனக்கு இரண்டு வருடங்களுக்காவது அந்தப் பதவியைத் தருமாறு வலியுறுத்தினார். இருவருக்குமே 80 வயதுகள் கடந்துவிட்டன.

மாவையருக்கு தேசியப் பட்டியல் கொடுக்கப்படவேண்டும் என்பதில் சிறீதரனும் பிடிவதமாக நின்றார். ஆனால், அரசியல் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவளிக்கவில்லை. சுமந்திரனுக்கு அந்தப் பதவியை வழங்குவது குறித்தும் பேச்சு எழுந்தது. தேசிய மக்கள் சக்தியால் புதிய அரசமைப்புக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு சுமந்திரன் நாடாளுமன்றத்தில் இருக்கவேண்டும் என்று கூட்டத்தில் பலரும் வலியுறுத்தினர். ஆனால், கட்சி கேட்டுக்கொண்டாலும் அந்தப் பதவியைத் தான் ஏற்கப் போவதில்லை என்பதை சுமந்திரன் உடனேயே தெளிவுபடுத்தினார். அதன் பின்னரும் அவருக்கு அந்தப் பதவி வழங்கப்படக்கூ-டாது என்பதில் சிறீதரன் கவனமாகக் கருத்துத் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு முயற்சிகள் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்பட்டால் நாடாளுமன்றத்திற்கு வெளியில் இருந்தும் சுமந்திரன் அந்தப் பணிகளில் பங்கெடுக்க முடியும் என்று தேசியப் பட்டியலுக்குள் சுமந்திரனின் பெயரை நுழைக்கவிடாதவாறு கருத்துத் தெரிவித்தார். இன்னும் 6 மாத காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி சுமந்திரனின் மடியில் வந்து தானாக வி-ழும் என்ற சாரப்படும்படியும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

தேசியப் பட்டியல் வழங்கப்படுவதை தான் எதிர்ப்பதால் சுமந்திரன் கோபப்பட்டு திருகோணமலை வழக்கில் ஏதும் பிரச்சினைப்படுத்தி தன்னைக் கட்சித் தலைவராக விடாமலேயே கட்சியைவிட்டு வெளியேற்றி விடுவாரோ என்ற அச்சம் காரணமாக அவரைத் தாஜா பண்ண அதனைச் சொன்னாரா அல்லது மாகாண சபைத் தேர்தலில் தான் முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதற்கான ஏதுநிலைகளைக் கருத்திக்கொண்டு அதனைச் சொன்னாரா என்பது தெளிவில்லை.

தேசியப் பட்டியல் தனக்கு வேண்டாம் என்று சுமந்திரன் சொன்ன பின்னர், சிறீதரனின் கருத்துத் தொடர்பில் யாரும் அங்கு பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. மாவையர் மட்டும் தனக்கு அந்தப் பதவியைத் தந்தால், புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது தான் அந்தப் பதவியிலிருந்து விலகி சுமந்திரனுக்கு அதனைக் கொடுப்பார் என்று கேட்டுப்பார்த்தார். அதற்கும் அரசியல் குழு மசியவில்லை. கூட்டத்தில் சுமந்திரனுக்கு அந்தப் பதவியை வழங்குவதற்கு மாவையர், சிறீதரன், குகதாசன் ஆகியோர் ஆதரவளிக்கவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

மாவையரை உள்ளே கொண்டுவருவதற்கு பெரும்பாடுபட்ட சிறீதரன், அந்தப் பதவியை மாவையருக்கு சில வருடங்களும் குலநாயகத்திற்குச் சில வருடங்களும் என்று பிரித்து வழங்கலாம் என்ற யோசனையை முன்வைத்தார். அதனையும் அரசியல் குழு ஏற்கவில்லை.

தேசியப் பட்டியல் ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டும் என்று குகதாசன் வலியுறுத்தினார். எனினும் இறுதியில் சத்தியலிக்கத்திற்கு அதனை வழங்குவதற்கு ஆதரவளித்தார். அந்த முடிவு கட்சியின் ஏகமனதான முடிவாக இருக்கவேண்டும் என்றும் சுமந்திரன் வலியுறுத்தியதைத் தொடர்ந்து மனமேயின்றி மாவையரும் அதற்கு ஒப்புதலளித்தார்.

கடைசியாகக் கருத்துத் தெரிவித்த சுமந்திரன், தான் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத போதும் கட்சியின் வழக்குகள் உள்ளிட்ட கட்சிப் பணிகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபடுவேன் என்ற கூட்டத்தில் அ-ழுத்தமாகத் தெரிவித்தார். அதாவது அவர் தொடர்ந்தும் செயற்பாட்டு அரசியலில் (அக்டிவ் பொலிடிக்ஸ்) இருப்பார் என்பதை வலியுறுத்தினார். கட்சி தன்னை முதன்முதலில் தேசியப் பட்டியல் மூ-லம் நாடாளுமன்ற உறுப்பினராக்குவதற்கு முன்னரும் தான் கட்சிக்காகப் பணியாற்றி இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அதன் காரணமாகவே தனக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தரப்பட்டது என்பதையும் தெரிவித்ததுடன் அதேபோன்று இனியும் செயற்படுவார் என்பதையும் கூறினார்.

அத்தோடு புதிய அரசமைப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக நாடாளுமன்றத்தில் தான் இருக்கவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் எதுவும் இல்லை என்பதையும் தெளிவுபடுத்தினார். அதற்கொரு காரணம் இருக்கின்றது. தேர்தல் முடிந்த பின்னர் சுமந்திரனைத் தொடர்புகொண்ட அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க, தேர்தல் தோல்வி குறித்து விசாரித்துள்ளார். தனது ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு முயற்சிகளை முன்னெடுக்கும்போது சுமந்திரன் நாடாளுமன்றத்தில் இல்லாதது குறித்து வருத்தம் தெரிவித்த அரசுத் தலைவர், பரவாயில்லை எல்லா விடயங்களும் நாடாளுமன்றத்தில் மட்டும் முடிவுசெய்யப்படுவதில்லையே என்றும் கூறியிருக்கிறார். அதனை ஏற்றுக்கொண்ட சுமந்திரன் புதிய அரசமைப்பு முயற்சிக்குத் தனது உதவி தேவைப்படும் போது தாராளமாகத் தான் அதனை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார் என்கிற உறுதிமொழியை அரசுத் தலைவருக்கு வழங்கியிருக்கிறார்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

# பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது

## சத்தியலிங்கம் தெரிவிப்பு

பெரும் பொறுப்பு என் மீது சுமத்தப்பட்டுள்ளது. அடுத்து வரும் 5 வருடமும் எப்படி செயற்படுகின்றேன் என்பதை பார்ப்பீர்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் தேசியபட்டியல் ஆசனம் வழங்கப்பட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பெரும்பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டுள்ளது. மாகாணசபை உறுப்பினராக இருந்தபோது பல அபிவிருத்தி திட்டங்களைச் செய்திருந்தேன். இருந்தபோதும் ஏதோ ஒரு காரணத்திற்காக நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் என்னை நிராகரித்தனர். அதற்குப் பலகாரணம் உள்ளது.

எனக்கு எதிரான போலிப் பரப்புரைகளை எதிர்க் கட்சிகளும், போட்டியாளர்களும் முன்வைத்திருந்தனர். அது தோல்விக்கு ஒரு காரணமாக இருந்தது. எனது தொழில் அரசியல் அல்ல. நான் ஒரு வைத்தியர். கட்சி இந்தப் பதவியை தராவிட்டால் மீண்டும் ஒரு அரச உத்தியோகத்தராகச் செயற்படும் எண்ணத்தில் இருந்தேன்.

வன்னி மாவட்டமானது திட்டமிட்ட இன அழிப்பு இடம்பெறுகின்ற ஒரு பிரதேசம். எனவே அதை உணர்ந்து செயற்படக்கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் தேவையை அறிந்து கட்சி இந்த ஆசனத்தை வழங்கியுள்ளது.

என் மீது கட்சி வைத்த நம்பிக்கையை ஏற்று இந்தப் பகுதி மக்களுக்கு முழுமையான எனது சேவையை அர்ப்பணிப்போடு செய்வேன். அந்த வகையில் வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களுக்கும் நன்றிகள். கட்சிக்கும் நன்றிகள்.

இனிவரும் ஐந்து வருடங்களில் சத்தியலிங்கம் எப்படி செயற்படுவார் என்பதை அனைவரும் நிச்சயமாக பார்ப்பீர்கள். கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலும் தொடருவேன். அதனை மாற்றுவது பொதுச்சபையில் தீர்மானிக்கப்படக்கூடிய ஒரு விடயம். அதனை விடுவதற்கான சந்தர்ப்பம் இன்னும் ஏற்படவில்லை என்றார்

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேல் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு கடன் தவணையின் பின்னரும் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கமைவாக சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பணித் தலைவர் பீற்றர் ப்ரூவர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு மூன்றாவது மீளாய்வுக்காக இலங்கைக்கு வந்திருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் நாட்டின் பொருளாதாரச் சீர்திருத்த வேலைத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது.

புதிய ஆளும்தரப்பின் பொருளாதாரக் கொள்கை தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூன்றாவது மீளாய்வின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான தனது நான்காவது கடன் தவணையை விடுவிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து செல்லவேண்டிய தேவையை உணர்ந்திருக்கிறோம்.அதற்காக நாங்கள் தொடர்ந்து செயற்படுவோம்.

நான் தமிழ் அரசுக் கட்சியின் தெரிவுசெய்யப்பட்ட தலைவரான நான் நீதிமன்ற தடையுத்தரவு நீக்கப்பட்டால் தலைவராக செயற்படுவேன். அதற்கான காலம் கனிந்துகொண்டிருப்பதாக உணர்கிறேன் என்றார்.

## தமிழர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தரப்புக்கள் ஒற்றுமைப்படவேண்டும். இதனை நாம் அழைப்பாகக்கூட விடுகின்றோம்.

தேர்தலில் தோற்றுப்போனவன் என இதனைப் பலர் எள்ளி நகையாடலாம். அவ்வாறில்லாமல் தமிழ் தலைமைகள் ஒன்றுபடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பிளவுபட்ட தமிழர்களாக தொடர்ந்தும் இருக்கவிருப்பமில்லை. கூட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் எனக் கூறவில்லை. ஆசன மோதல்களை கைவிட்டு தமிழ் தரப்பு ஒன்றிணையவேண்டும். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து விட்டார்கள் என தமிழ் வாக்களர்களை மலினப்படுத்த விரும்பவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். பொதுக்கட்டமைப்பின் உடைவுக்கு, பொது அமைப்புக்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். அவர்கள்தான் உடைத்தார்கள். அதனைத் தொடர்ந்து கட்சி தலைவர்களின் ஈகோ மற்றும் ஆசனபங்கீடும் காரணமாக அமைந்திருந்தது என்றார்.

## ஸ்ரீ லங்கன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமதமாகலாம் எனவும் ஸ்ரீ லங்கன் விமான சேவையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதற்கமைய, இன்று மாலை 6.35க்கு சென்னை செல்லவிருந்த ஸ்ரீலங்கன் விமானச் சேவைக்கு சொந்தமான யு.எல் 123 என்ற விமானமும், இந்தியாவின் சென்னையிலிருந்து, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு புறப்படவிருந்த யு.எல் 124 என்ற விமானமும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் புதுடில்லி, அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் உள்ளிட்ட நகரங்களிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு புறப்படவிருந்த விமானங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கன் விமான சேவையின் பேச்சாளர் ஒருவர் எமது செய்தி சேவைக்குத் தெரிவித்தார்

## தமிழ் அரசின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசுக் கட்சிக்கு கிடைத்த ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்று கூட்டத்தில் ஆராயப்பட்டது. நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன. இறுதியில் ஆசனத்தை ஏற்கனவே வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த சத்தியலிங்கத்திற்கு வழங்குவதற்கு அரசியல் குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புதிய அரசியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு மடங்கு அதிக விருப்பு வாக்குகளை வழங்கி என்னை வெற்றி பெறச் செய்த கொழும்பு மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாடாளுமன்றத்தில் எனது செயற்பாடுகளுக்கு மக்கள் மத்தியில் கிடைக்கப் பெற்ற வரவேற்பாகவே நான் இதனைப் பார்க்கின்றேன்.

அதேபோன்று எதிர்வரும் காலங்களிலும் மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில் செயற்படுவேன். ஊழலுக்கு எதிராகப் போராடுவது, பொருளாதாரம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தல் என்பவற்றை தொடர்ந்தும் மேற்கொள்வேன். எனினும் நாட்டில் வடக்கு, தெற்கு மற்றும் மலையகம் என சகல மக்களும் அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதற்கான அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கியிருக்கின்றனர். இது புதியதொரு கலாசாரமாகும்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தீர்மானித்திருக்கின்றேன்.

பொருளாதாரம் தவறான பாதையில் சென்றால் அதற்கு எதிராகக் குரல் கொடுத்து மக்களுக்காக முன்னிப்பதற்கு, ஊழல் மோசடிக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கு ஒருபோதும் பின்வாங்க மாட்டேன். மக்கள் ஏற்படுத்தியிருக்கின்ற இந்த புதிய அரசியல் கலாசார மாற்றத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும் நான் தயாராகவுள்ளேன் என்றார்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் இம்முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இம்முறை தெரிவாகியுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் அவர்களது தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான விசேட கருமபீடமொன்று நாடாளுமன்றத்தில் நிறுவப்படும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் குறித்த கருமபீடத்தின் ஊடான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## 1 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பிடுகின்றனர்.

இந்தவிடயம் தொடர்பில் 12 நிறுவனங்களின் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

## நுகர்வோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றியே குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த நியமனம் தொடர்பில், நுகர்வோர் அதிகார சபையின் தற்போதைய தலைவர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கேட்டபோது, அவ்வாறான நியமனத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. அத்துடன், நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு நியமிக்கப்பட்ட ஊடக அதிகாரியும் தற்போதைய தலைவரால் நீக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் வர்த்தக அமைச்சர் தன்னிச்சையாக இந்த நியமனத்தை வழங்கியுள்ளமை உறுதியாகியுள்ளது. அதற்கமைய, குறித்த நியமனம் தொடர்பில் தற்போதைய தலைவர் விசாரணைகளைத் தொடங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொள்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரம் நாடாளுமன்றத்தின் வைபவரீதியான அமர்வுகளில் தலைமை தாங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் எதிர்வரும் நவம்பர் 21 மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்று செல்லும் பவானந்தராஜாவுக்கு வாழ்த்து

## அமுது செபஸ்ரியான் நேரு



யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராஜாவுக்கு லண்டனில் இருந்து வாழ்த்துக்களைதெரிவித்திருக்கும்சமூகசேவையாளர் அமுது செபஸ்ரியான் நேரு தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் வட பகுதியின் பொருளாதார அபிவிருத்திக்கும் அவர் பயனுறுதியுடைய பங்களிப்பை வழங்குவார் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து தேசியக் கட்சி ஒன்றின் சார்பில் அதுவும் இடதுசாரி கட்சியின் சார்பில் பெருமளவுதமிழ்உறுப்பினர்கள்பாராளுமன்றத்துக்கு செல்வது இதுவே முதல் தடவையாகும்.

அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றபிறகுதேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு தமிழ் மக்கள் மத்தியில் அதிகரிக்கத் தொடங்கியது.

அந்த ஆதரவு குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் பெருகுவதற்கு தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் முக்கியமான காரணமாக அமைந்தார்கள். அவர்களில் இருவர் வைத்திய கலாநிதி பவானந்தராஜா. சுகாதாரத்துறை மூலமாக நீண்டகாலம் சேவைசெய்த அவரை யாழ்ப்பாண மக்கள் இப்போது நாடாளுமன்றம் அனுப்புகிறார்கள். அவரது தன்னலமற்றமுன்னைய சுகாதாரத்துறைச் சேவையேமக்கள்அவர் மீது நம்பிக்கை வைப்பதற்கு அடிப்படையாக அமைந்தது.

ஜனாதிபதி தேர்தலில் அநுர குமாரவின் வெற்றி தென்னிலங்கையில்ஒரு வரலாற்று முக்கியத்துவ அரசியல் மாற்றத்தை குறித்து நின்றது. அந்த மாற்றம் வட பகுதியில் தமிழ் மக்களுக்கும் பயன்தரக்கூடிய மாற்றம் அல்ல என்று தமிழ் கட்சிகள் கூறிக்கொண்டிருந்த ஒரு நேரத்தில் அந்த மாற்றத்தின் மூலமாக தமிழ் மககளும் பயன் பெறுவதற்கு வழி செய்யும் ஒரு மார்க்கம். ஆகவே, பவானந்தராஜா நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராகக் களமிறங்குவதற்கு தீர்மானித்தார். அந்த தீர்மானத்தை யாழ்ப்பாண மாவட்ட மக்களும் வரவேற்று ஆதரித்து அவரை கணிசமான வாக்குகளுடன் வெற்றிபெற வைத்திருக்கிறார்கள்.

போரால் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தில் இன்னமும் ஆயிரக்கணக் கானவர்கள் தங்களது வாழ்க்கையில் வழமை நிலைக்க திரும்ப முடியாமல் இருக்கிறார்கள்.

அந்த மக்களுக்கு வாழ்வாதாரத்துக்கான உதவிகளையும் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் கட்டியெழுப்புவதற்கானதொழில் வாய்ப்புக்களையும் வழங்குவதற்கு அரசாங்கத்தின் தாராளமான உதவிகளை பெற்றுக் கொடுக்க பவினந்தராஜா பயனுறுதியுடையநடவடிக்கைகளைஎடுக்கவேண்டும்.

வெறுமனே உணர்ச்ச்சியைக் கிளறும் அரசியல் கோலோச்சிய ஒரு மண்ணில் சமூக மாற்றத்தை நாடும் மக்களுக்கு நம்பிக்கை நட்டத்திரமாக பவானந்தராஜா விளங்குகிறார். அவர் தன் மீது நம்பிக்கைவைத்திருக்கும்மக்களின்நல்வாழ்வுக்காக ஆளும் கட்சியின் உறுப்பினர் என்ற வகையில் பெருமளவு பணிகளை அரசாங்கத்தின் உதவியுடன் முன்னெடுக்கக்கூடிய ஆற்றலுடனும் அறிவுடனும் பவானந்தராஜா இருக்கிறார்.

அவரின் கரங்களை பலப்படுத்துவது யாழ்ப்பாண மக்களின் கடமையாகும். பவானந்தராஜா அரசாங்கத்துடன் ஒத்துழைத்துச் செயற்பட்டு மக்களின் பெருவாரியான பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்கு தமிழ் மக்கள் கட்சி அரசியல் மாச்சரியங்களை மறந்து சகல பிரிவினரும் ஒத்துழைக்க வேண்டும்.

வெறுமனே இனத்துவ அரசியல் சுலோகங்களை பயன்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளின் போக்கில் ஒருமாற்றம் தேவைப்படும். இந்த நேரத்தில் தேசிய அரசியலை கூடுதல் பட்சம் தமிழ் மக்களின் நலன்களுக்காக பயன்படுத்துவதற்கு தாராளமாக முயற்சிக்க வேண்டும். அத்தகைய ஓர் ஆரோக்கிரமான பாதையில் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு இப்போது கிடைத்திருக்கிறது. அதன் முன்னரங்கத்தில் நிற்கும் பவானந்தராஜாவின் கரங்களைப் பலப்படுத்துவோம் என்று அமுது நேரு தனது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

# தேசிய மக்கள் சக்தியினர் நானு ஓயாவில் பாற்சோறு வழங்கி வெற்றிக் கொண்டாட்டம்



இலங்கையின்10ஆவதுநாடாளுமன்றதேர்தலில் தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைக் கைப்பற்றி வரலாற்றுசாதனையைப்படைத்துள்ளதைமுன்னிட்டு நானுஓயாகிரிமிட்டிபகுதியில்அமைதியானமுறையில் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

சனிக்கிழமை மாலை நானுஓயா டெஸ்போட் கிரிமிட்டி ஆலயத்துக்கு முன்பாக தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் பொதுமக்களுக்கு பாற்சோறும் இனிப்புப் பண்டங்களும் வழங்கினர்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட அமைப்பாளருமான மூக்கையா பாஸ்கர் இணைந்துகொண்டுதேர்தலில் வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், இக்கொண்டாட்ட நிகழ்வில் அப்பகுதிகளில் வசிக்கும்ஏராளமானகட்சியின் முக்கிய உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.



# நாட்டில் தீர்க்கப்படாத பிரச்சினைகளை அநுர அரசு தீர்க்கும் என நம்புகிறேன்

## அருண்மொழிவர்மன் தம்பிமுத்து தெரிவிப்பு

நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கும்தேசியமக்கள்சக்திக்கும்மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்த நாட்டிலே தீர்க்கப்படாத பிரச்சினைகளை தீர்ப்பார்கள் என நாம் நம்புகின்றோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண்மொழிவர்மன் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அருண்மொழிவர்மன் தம்பிமுத்துவின் ஊடக சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது அவர் இக்கருத்தினை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கையில் நடந்து முடிந்த நாடாளுமன்ற பொது தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்போது இலங்கையில் நாடாளுமன்றத்தில் புதிய அரசாங்கம் பதவியேற்க இருக்கிறது. அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கும் அவரது தேசிய மக்கள் சக்திக்கும் மூன்றில்இரண்டுஆசனங்கள் கிடைக்கப்பெற்றிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் முழுமையாக பாவித்து இந்த நாட்டிலே தீர்க்கப்படாத பல விடயங்களை தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதைஅவர்கள் கையில் எடுக்க வேண்டும் என்ற விடயத்தையும் நான் அவர்களுக்கு வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் எமது ஆதரவாளர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியானது 20 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் புத்தெழுச்சி பெற வேண்டும் என்று கடுமையாக உழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எமது கட்சியின் ஆதரவாளர்களுக்கும் நான் கூற விரும்பும்விடயம்என்னவென்றால், எமதுசெயற்பாடு தொடர்ச்சியாகமுன்னெடுக்கப்படும்தமிழர்விடுதலை கூட்டணியானது தற்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலையில் இருந்து முழுமையாக புத்தெழுச்சிபெறும்என்றமுழுமையான




நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கானவேலைத்திட்டங்களில்நான் முன்னெடுத்துச்செல்லஇருக்கின்றேன்.

எமது ஆதரவாளர்களுக்கு நான் கூறியிருக்கிறேன். மட்டக்களப்பிலே மாற்றத்தைக்கொண்டுவர வேண்டும். மட்டக்களப்பில் ஒரு புதிய அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்று கூறி இருக்கின்றேன். அதன் அடிப்படையில் நாங்கள் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவிருக்கிறோம்.

மட்டக்களப்பில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல கடமைகள் இருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருக்கின்றன. நிச்சயமாக எமக்கான நிலப் பிரச்சினை இருக்கிறது. இன்னும் சொல்லவேண்டுமென்றால், மேய்ச்சல் தரை பிரச்சினை இருக்கிறது. வளங்கள் சூறையாடப்படும்நிலைமைகாணப்பட்டு வந்திருக்கிறது.

இதற்கெல்லாம்எமதுநாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்க வேண்டும். நானும் ஒரு நிழல் நாடாளுமன்ற உறுப்பினராக இந்த மாவட்டத்திலே தொடர்ச்சியாக எனது நிலைப்பாட்டை, பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கானசெயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வேன் என்றும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். – என்றார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

இணையம் - onlinekathir.com

# புதியவர்களினால் வரும் சாதகமும் பாதகங்களும்

பத்தாவது நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களில் 175 பேர் புதியவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதிலும் ஆளும் தரப்பிலுள்ள 159 உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் புதியவர்கள். அவர்களிலும் அதிகமானவர்கள் இளைஞர்கள். இந்த விடயம் புத்துணர்ச்சியூட்டும் சாதகமான அம்சத்தைக் கொண்டிருப்பதில் சந்தேகமில்லை. அதேநேரம் அதில் பாதகமும் இல்லாமல் இல்லை. புதியவர்கள் அனுபவமற்றவர்களாக இருக்கின்றனர் என்பது இந்த நெருக்கடியான சமயத்தில் பல பாதங்களைக் கொண்டிருக்கின்றன என்பதையும் மறைப்பதற்கில்லை.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் புதியவர்களாக இருக்கும் நிலையில் இன்று பதவியேற்கும் அமைச்சரவையிலும் பல புதிய முகங்கள் இருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. அனுபவமற்ற புதிய அமைச்சர்கள் நெருக்கடி நிலமையில் அமைச்சுப் பொறுப்புக்களை எப்படிச் சரிவரக் கவனிப்பார்கள் அல்லது அவற்றைக் கையாள்வதற்கான அவர்களின் திறன் நிச்சயமற்றது என்பதிலும் சந்தேகமில்லை.

தேர்தல் பரப்புரைகளின்போது முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தை தொடர்ந்து அழுத்தித் தெரிவித்து வந்தார். புதிய ஆட்சியாளர்கள் அனைவரும் அரசை நடத்துவதில் அனுபவமற்றவர்களாக இருக்கும் நிலையில் நாடாளுமன்றத்திற்காகவது அனுபவமானவர்களை அனுப்புங்கள் என்று அவர் மக்களிடம் கேட்டார். ஆனால், அவராலும் அவருக்கு முன்னிருந்த அனுபவமான அரசியல்வாதிகளாலும் நாடு நிர்வகிக்கப்பட்ட மிக மோசமான நிலையைக் கண்டு விரக்தியடைந்த மக்களோ அனுபவமானவர்களை நிராகரித்து அனுபவமற்றவர்களையே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

இலங்கைக்கு புத்துணர்வூட்டுவதற்கு இந்தப் புதியவர்களின் தெரிவு மிகப் பயனுள்ளதாக இருக்கும். அதேவேளை, அவர்களின் அனுபவமின்மை அமைச்சுப் பொறுப்புக்களை அவர்கள் ஏற்கின்றபோது ஆளும் தரப்புக்கு சவால் மிக்கதாக அமையும் என்பதையும் மறுப்பதற்கில்லை. அமைச்சர்கள் அனுபவமற்றவர்களாக இருக்கும் நிலையில் அவர்களின் செயற்பாடுகள் அரச அதிகாரிகளில் பெரிதும் தங்கியிருக்கும். ஏற்கனவே ஊழல் மலிந்த அரச நிர்வாக அதிகாரிகளைக் கொண்டிருக்கும் இலங்கையில் அத்தகையவர்களின் வழிகாட்டலில் புதிய அமைச்சர்கள் செயலாற்ற முனைவதும் ஆபத்தானதுதான்.

நாடுசெழிப்பானநிலையில்இருக்கும்போதுபுதியவர்கள் ஆபத்தானவர்களா இருக்கமாட்டார்கள். அவர்கள் விடக்கூடிய தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கு கால அவகாசமும் வசதி வாய்ப்பும் இருக்கும். ஆனால் நெருக்கடியான நிலையில் அந்த வாய்ப்புக்கள் மிக அரிதாகி விளைவுகள் பாரதூரமானதாகிவிடும் என்பதையும் கருத்திலெடுத்துத்தானாகவேண்டும்.

எனவே புதிய ஆட்சியாளர்களுக்கு முன்னுள்ள இந்தச் சவாலை அவர்கள் எப்படி வெற்றிகரமாகக் கையாள்கிறார்கள் என்பதிலேயே இலங்கையின் எதிர்காலமும் மக்களின் எதிர்பார்ப்பு மீதான வெற்றியும் தங்கியிருக்கின்றது.



# மகிந்தவும் ரணிலுமே ஜே.வி.பி. சுனாமியை உருவாக்கியவர்கள்

**உபுல் யோசப் பெர்னாண்டோ**

ஜே.வி.பி.யின் (ஜனதா விமுக்தி பெரமுன) இரண்டாம் நிலைத் தலைவரான உபாலி ஜயவீர, ரோஹன விஜேவீரவின் படுகொலைக்குப் பின்னர் கட்சியின் மத்திய குழுவில் முக்கிய இடத்தைப் பிடித்தார். பின்னர் அவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். மார்ச் 6, 1990 அன்று பல்லேகல இராணுவ முகாமில் வைத்து வாக்குமூலம் அளித்தார். அவரது அறிக்கை சுமார் 21 பக்கங்களைக் கொண்டது,

ஒருசந்தர்ப்பத்தில், அவர் இவ்வாறு தெரிவித்தார்:

'1989ஆம் ஆண்டு நவம்பர் 13, பிராந்தியக் கூட்டத்திற்கு தோழர்களுடன் பயணித்தபோது, கடையொன்றில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டியில், எமது தலைவர் தோழர் ரோஹண விஜேவீர கைது செய்யப்பட்டதைக் கண்டேன். நான் அதிர்ச்சியடைந்தேன்'

1989 நவம்பர் 13 ஜே.வி.பியின் முதுகெலும்பு முறிந்த நாள். தனது அன்புத் தலைவர் பிடிபட்டதைக் காணும்போது உபாலி ஜயவீரவுக்கு தரை நடுங்குவது போல உணர்ந்திருக்கவேண்டும்.

அது நடந்து சரியாக 35 ஆண்டுகளுக்குப் பின்னர், ஜே.வி.பி. இலங்கையில் ஓர் அரசியல் பூகம்பத்தை உருவாக்கியுள்ளது. இதுகுறித்து உபாலி ஜயவீர நினைத்துப் பார்த்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அது நடந்துள்ளது.

'இந்த நிலநடுக்கத்தையும் சுனாமியையும் உருவாக்கியது யார்?'

பூகம்பமும் சுனாமியும் ரணில் விக்ரமசிங்கே, பசில் ராஜபக்சே, மற்றும் ராஜபக்சே குடும்பத்தினரால் உண்டானது.

இந்த சுனாமிக்கான விதை 2015 நல்லாட்சி என்றழைக்கப்பட்ட ஆளும் தரப்பு இருந்தபோது ஊன்றப்பட்டது. மைத்திரிபால சிறிசேன ஐ.தே.கவின் பொது வேட்பாளராகப் போட்டியிட்டு, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை பலவந்தமாகப் பொறுப்பேற்ற பின்னர், நிகழ்வுகள் ஒவ்வொன்றாகக் கட்டவிழத் தொடங்கின. 2015ஆம் ஆண்டே மைத்திரிபாலவை ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்க மகிந்த அனுமதித்து, அரசியலில் இருந்தும் ஓய்வு பெற்றிருந்தால் இந்த சுனாமி அப்போதே ஏற்பட்டிருக்கலாம்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்ததன் மூலம், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை திட்டமிட்ட வகையில் பலவீனப்படுத்த ரணிலுக்கு உதவினார் மைத்திரி. சுதந்திரக் கட்சியை அதன் கூட்டுக்குள்ளேயே முடக்கினார். அதையடுத்து ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் ரணில் விக்கிரமசிங்கவைத் தமது பரம எதிரியாகவும் மைத்திரிபாலவை ஒரு துரோகியாகவும் பார்த்தனர். இந்த வெறுப்பை உணர்ந்த மகிந்த ராஜபக்ச அதனைத் தனக்கு அரசியல் மூலதனமாக்கிக்கொண்டார், ரணில் மற்றும் மைத்திரிபால இருவருக்கும் எதிராக ஒரு கட்சியை ஏற்பாடு செய்தார். ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ரணில் எதிர்ப்பு மற்றும் ஐ.தே.கவினரில் ரணில் எதிர்ப்பு சக்திகள் மகிந்தவைச் சுற்றி அணி திரண்டனர். மகிந்த பொஹொட்டுவ கட்சியை உருவாக்குவதைதவிர்த்துவிட்டு மைத்திரிபாலவிடம் சுதந்திரக் கட்சியை ஒப்படைத்து அதை ரணிலிடம் சரணடைய அனுமதித்திருந்தால் 2015ஆம் ஆண்டே 5.7 மில்லியன் வாக்காளர்களுக்கு ஜே.வி.பி. தலைமை தாங்கியிருக்கலாம்.

மாறாக, தனது அரசியல் நகர்வுகள் மூலமாக ரணில் எதிர்ப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சக்திகளின் ஹீரோவாக மகிந்த மாறினார். 2019 ஜனாதிபதித் தேர்தலில், ரணில் மற்றும் மைத்திரிபாலவின் அரசியல் சூழ்ச்சிக்கு எதிராக மகிந்தவும் ராஜபக்ச குடும்பமும் எழுந்து நின்றதால், கோட்டாபய ராஜபக்ச 6.9 மில்லியன் வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

2019இல் கோட்டாபயவின் ஜனாதிபதி பதவியும் 2020இல் மஹிந்தவின் பிரதமர் பதவியும் பெரும்பாலும் மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் குற்றவாளிகளை பொறுப்புக்கூற வைப்பதற்கான வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டது. எவ்வாறாயினும், கோட்டாபய ருவன்வெலி மகா சேயாவில் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்தபோது, கூட்டத்தினர் அன்றைய பிரதமர் ரணிலுக்கு எதிராக உரக்கக் கூச்சலிட்டு அவர்களின் ஆழ்ந்த அதிருப்தியை வெளிப்படுத்தியது.

இருந்தும், கோட்டாபய, மஹிந்த, பசில், அல்லது நாமல் ஆகிய இருவருமே தங்களுக்கு வாக்களித்த 6.9 மில்லியன் மக்களின் கோபத்தை புரிந்து கொள்ளவில்லை. 2022 அரகலய (மக்கள் போராட்டத்தின்) போது, அவர்கள் தங்கள் வாக்காளர் தளத்தின் கோபத்தைப் புறக்கணித்து, ரணிலிடம் ஆட்சியை ஒப்படைத்தனர். ராஜபக்ச குடும்பத்தையும் ஆளும்தரப்பையும் பாதுகாப்பதற்காக சஜித் பிரேமதாசவின் புகழை மட்டுப்படுத்துவதில் அவர்களின் கவனம் திரும்பியது.

அப்படி நடந்துகொண்டதற்குப் பதிலாக, அவர்கள் ஒதுங்கி சஜித்தை வழிநடத்த அனுமதித்திருந்தால் நிலமை வேறு மாதிரியானதாகத் திரும்பியிருக்கும். அந்தச் சூழ்நிலையில், சஜித் ஒரு பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்திருப்பார். ஐக்கிய மக்கள் சக்தி பெரும்பான்மையைப் பெற்று, பொது ஜன பெரமுனவைப் பிரதான எதிர்க்கட்சியாக மாற்றியிருக்கும். அந்தத் தேர்தலிலும் ஜே.வி.பி. தனது ஆசனங்களை அதிகரித்திருக்கும். ஆனால் மூன்றாம் சக்தியாகவே இருந்திருக்கும்.

அந்தத் தேர்தலில் ரணிலுக்குப் பதிலாக ஒரு புகழ் வாய்ந்த வேட்பாளரை ராஜபக்சக்கள் நிறுத்தியிருந்தால், அக்கட்சி பிரதான எதிர்க்கட்சியாக கணிசமான செல்வாக்கைத் தக்கவைத்திருக்க முடியும்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# மகிந்தவும் ரணிலுமே...

4ம் பக்கதொடர்ச்சி ...........

ஜனாதிபதிப் பதவியை ரணிலிடம் ஒப்படைத்ததன் மூலம், 2015ஆம் ஆண்டு ரணில் – –மைத்திரி அரசியல் குழப்பதையே ராஜபக்சக்களும் பிரதிபலித்தார்கள். கோத்தாபயவுக்கு வாக்களித்த 6.9 மில்லியன் மக்களால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, ஏனெனில் ராஜபக்சக்கள் வங்கிக் கொள்ளைகள் மற்றும் ஈஸ்டர் தாக்குதலில் ஈடுபட்ட முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு உதவினார்கள் என்று ரணில் ஒருமுறை குற்றம் சாட்டியிருந்தார். இந்த துரோகம் ரணில் மற்றும் ராஜபக்சே குடும்பத்தை அந்நியப்படுத்த வழிவகுத்தது.

இதற்கிடையில், மதிப்பிழந்த எதிர்க் கட்சியினால் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தையும், ரணிலின் பொருளாதாரக் கொள்கைகள் மீது பொதுமக்களின் ஏமாற்றத்தையும் பயன்படுத்தி, ஜே.வி.பி குறிப்பிடத்தக்க சக்தியாக உருவெடுத்தது. ரணில், ஊடக வலையமைப்புகளுடன் இணைந்து, 2024 ஜனாதிபதித் தேர்தலில் தானும் சஜித்தும் இணைந்து போட்டியிடலாம் என்ற கதையைப் பரப்பி வாக்காளர்களை மேலும் குழப்பினார்.

ரணில் வடக்கில் இருந்த தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 'பார் லைசென்ஸ்' கொடுத்துக்கொண்டே சென்றார். அதன் விளைவாக அவர்களும் 2024 பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவினர்.

ரணிலிடமிருந்து ஆளும்தரப்பை அகற்ற பசில் முயற்சித்தபோதும், பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் ரணிலின் சிறப்புரிமைகளுக்கு அடிமைப்பட்டிருந்தனர். இறுதியாக பசில் நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும் என ரணிலுக்கு யோசனை தெரிவித்தார். அப்போதே ரணில் நாடாளுமன்றத்தை கலைத்திருந்தால் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருக்கும். ஜே.வி.பி. எதிர்க்கட்சியாக இருந்திருக்கும். பொதுஜன பெரமுனவும் அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கும். ரணில் ஜனாதிபதியாகவேண்டும் என்ற கனவிலும், சஜித் மீதான வெறுப்பினாலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கவில்லை.

அதன் விளைவுகளை இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அனைவரும் அனுபவிக்க வேண்டி வந்திருக்கிறது. இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு ஏராளமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் போட்டியிட முன்வராமலேயே வீட்டுக்குச் சென்றனர். மற்றவர்களை ஜேவிபி வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கின்றது.

# ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் சனியன்று கைது

பறயனாலங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆண்டியாபுளியங்குளம் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பறயனாலங்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் ஆவார். சந்தேக நபரிடமிருந்து 05 கிராம் 100 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பறயனாலங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் ஊடாக வன்னி மாவட்ட எம்.பி ஆகிறார் உபாலி சமரசிங்க



தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியில் ஊடாக

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக உபாலி சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி தனது 18 தேசியப் பட்டியல்களுக்கும் உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களது பெயரை வெளியிட்டுள்ளது.

அதில், வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்டு தோல்வியடைந்த வவுனியா, மடுகந்தையில் வசிக்கும் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளரும், கட்சியின் நீண்டகால உறுப்பினருமான உபாலி சமரசிங்க அவர்களது பெயரும் உள்வாங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவருக்கு பிரதி அமைச்சர் பதவியும் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கொழும்பில் வெவ்வேறு பகுதிகளில் ஹெரோயினுடன் இருவர் கைது

கொழும்பு, மொரட்டுவ பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்ட இரு வேறு சுற்றிவளைப்புக்களில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லுனாவ பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மொரட்டுவ பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடம் இருந்து 05 கிராம் 210 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படோவிட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கல்கிஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த 65 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவ மற்றும் கல்கிஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# திகாமடுல்லவில் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் வாக்குகள்

(சகாதேவராஜா)

நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தின் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள் வெளியாகியுள்ளன.

திகாமடுல்ல மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட வசந்த பியதிஸ்ஸ அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி- 04 ஆசனங்கள்

1. வசந்த பியதிஸ்ஸ - 71,120
2. மஞ்சுள ரத்நாயக்க - 50,838
3. பிரியந்த விஜேரத்ன - 41,313
4. முத்துமெனிக்கே ரத்வத்தே - 32,145

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

1. எம். எம். தாஹிர் -14,511

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

1. மீராஷாஹிபு உதுமாலெப்பே- 13,016

இலங்கை தமிழரசு கட்சி

1. கவீந்திரன் கோடீஸ்வரன் - 11,96

# ஹெரோயினுடன் ஒருவர் கொக்குவிலில் கைது

கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் 120 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசன் சூரியபண்டாரவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசியலில் இருந்து ஓய்வுபெற்ற ஜமீல்



(றிபாஸ்)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி சார்பாக சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜமீல் தனது நேரடி அரசியல் செயற்பாட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றிகளை தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

எனது கடந்த கால செயற்பாடுகளையும், சமூக முன்னேற்றத்திற்காக தான் ஆற்றிய பணிகளையும் கருத்தில் எடுத்து எனக்காக வாக்களித்த மக்களுக்கு இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கான தேர்தல் பிரச்சாரங்களில் மாவட்டம் பூராவும் இரவு, பகலாக அர்ப்பணிப்புடன் களப் பணியாற்றிய செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் விசேடமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவப் பருவத்திலிருந்தே சமூகப் பணியில் செயலாற்றி வந்த நான் எனது சாய்ந்தமருது மண்ணுக்கும், கல்முனை தொகுதிக்கும் முழு அம்பாறை மாவட்டத்திற்கும் அரசியல் அதிகாரத்தின் ஊடாக முடியுமானளவு தொண்டாற்ற வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் இத்தேர்தலில் களமிறங்கியிருந்தேன்.

கல்முனை தொகுதியின் பிரதிநிதித்துவம் இழக்கப்போகும் அபாயத்தை உணர்ந்தே உடல் நலம் முழுமையாக தேறாத நிலையிலும் இறுதி நேரத்தில் வேட்புமனுவில் கையெழுத்திட்டு மக்கள் மன்றத்தில் தோன்றி - அரசியல் கள நிலைவரங்களை எடுத்துக் கூறி மன்றாடினேன்.

நாட்டில் மாற்றத்தையும் மறுமலர்ச்சியும் எதிர்பார்த்த அதிகமான மக்கள் ஜனாதிபதி தலைமையிலான கட்சிக்கு வாக்களித்து கல்முனை தொகுதிக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்து விட்டு, கைசேதப்பட்டு புலம்பிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

எமக்கு தெளிவான வெற்றிவாய்ப்பு காத்திருந்தும் சிலரது பிழையான வழிகாட்டல் காரணமாக எம்மைப் புறந்தள்ளி விட்டு, மாற்றம் வேண்டி வாக்களித்ததால் நமக்கான பிரதிநிதித்துவத்தை பறிகொடுக்கும் வரலாற்றுத் தவறை செய்து விட்டோம் என்று இப்போது கைசேதப்படுவதில் பயனில்லை.

மேலும், எனது வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உத்தரவாதமளித்து விட்டு இறுதி நேரத்தில் கழுத்தறுப்புச் செய்தவர்களின் துரோகத்தனத்தை இறைவனிடமே பாரம்சாட்டுகின்றேன்.

எவ்வாறாயினும் எனது அரசியல் வகிபாகத்தை நிராகரித்த மக்களின் நிலைப்பாட்டை மனமுவந்து ஏற்றுக் கொள்கிறேன் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# கட்சிக்கு வாக்களித்த அனைத்து வாக்காளர்களுக்கும் நன்றிகள்

## புதிய எம்.பியாக தெரிவு செய்யப்பட்ட அஷ்ரப் தாஹிர்



(பாறுக் ஷிஹான்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில ஓர் ஆசணத்தை பெற்றுக்கொள்வதற்காக உழைத்த



பத்து வேட்பாளர்களுக்கும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் போராளிகள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் என்ற ரீதியில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவருமான அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

2024 நடைபெற்று முடிந்த 10 ஆவது பாராளுமன்ற தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் வெள்ளிக்கிழமை இரவு பொதுமக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியில் தற்காலிகமாக 2024 நடைபெற்று முடிந்த 10 ஆவது நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த வாக்கெண்ணும் நிலையத்தில் தனது வெற்றியை உறுதிப்படுத்திய பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் முதன்மை வேட்பாளரும் வெற்றியடைந்து புதிய நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அஷ்ரப் தாஹிர் ஆதரவாளர்களால் மாலை அணிவிக்கப்பட்டு நிந்தவூர் ஜும்மா பள்ளிவாசலுக்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு துஆ பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

மேலும் அங்கு பொதுமக்களுடன் கலந்துரையாடி பின்னர் இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசணத்தை பெற்றுக்கொள்வதற்காக உழைத்த பத்து வேட்பாளர்களுக்கும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் போராளிகள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் என்ற ரீதியில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டார்.



# அம்பாறையில் படகுச் சின்னதுக்கு 2330 வாக்குகள் மட்டுமே கிடைத்தன

(சகாதேவராஜா)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி படகுச் சின்னத்தில் பெற்றுக் கொண்ட வாக்குகள் 2330 வாக்குகள் ஆகும்.

அம்பாறை மாவட்ட த.ம.வி.பு.கட்சி தலைமைவேட்பாளர் பொறியியலாளர் தேவராசா சர்வானந்தம் 79 வாக்குகளை பெற்றுள்ளார்.

ஏனைய வேட்பாளர்கள் பெற்ற வாக்கு விவரம் வருமாறு..

1. முத்துக்குமார் விக்கினேஸ்வரன் - 502
2. செல்வநாயகம் ரசிகரன் - 491
3. வெள்ளையன் மோகன் - 483
4. பகிரதன் சுகிர்தன் - 307
5. சோமநாதன் விபுல்தாஸ் - 122
6. கோமளராசா லோகிதரூபன் - 96
7. கணேசசுந்தரம் குலமணி - 91
8. தெட்சணாமூர்த்தி நவநீதராஜ் - 85
9. தேவராசா சர்வானந்தம் - 79
10. அற்புதலிங்கம் விஸ்கரன் - 7

# சண்முகம் குகதாசன் மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவான சண்முகம் குகதாசன் திருகோணமலை சல்லி பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

குறித்த பகுதி மக்கள் அமோக வரவேற்பளித்ததுடன் இதன் போது வாக்களித்த மக்களுக்காக சண்முகம் குகதாசன் நன்றிகளையும் தெரிவித்து கொண்டார்.



# புத்தளம் வரலாற்றில் ஒரு லட்சத்திற்கும் அதிக விருப்பு வாக்குகள் பெற்று அபயரத்ன சாதனை

(சியாஜ் )

புத்தளம் மாவட்டத்தின் வரலாற்றில் இதுவரை இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் எந்த ஒரு வேட்பாளரும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றதில்லை. அதி கூடிய விருப்பு வாக்குகளை பெற்றுக் கொண்ட வேட்பாளராக கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் சனத் நிசாந்த சுமார் 80 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இதுவே புத்தளம் மாவட்டத்தில் அதி கூடிய விருப்பு வாக்குகளாக பதிவாகியிருந்தது.

இதனை முறியடித்து இம்முறை இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஹரிச்சந்திர அபயரத்ன 113334 விருப்பு வாக்குகளை பெற்று சாதனை படைத்துள்ளார்.

# அல்குர்ஆன் மனனப் போட்டி

(ஸாகிர்)

இலங்கையிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலயம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து தேசிய ரீதியிலான அல்குர்ஆன் மனனப் போட்டியினை இரண்டாவது தடவையாக நடாத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தெரிவித்தார்.

இப்போட்டியானது எதிர்வரும் 2025 ஜனவரி மாதமளவில் கொழும்பில் நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சனிக்கிழமை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிடப்பட்ட சுற்று நிரூபத்தின்படி, இப்போட்டிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரபுக் கல்லூரிகள், ஹிப்ழுல் குர்ஆன் மத்ரஸாக்கள் மற்றும் அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் ஆகியவற்றை மையப்படுத்தி ஆண், பெண் இருபாலாருக்கும் நான்கு பிரிவுகளாக நடத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றிபெறும் போட்டியாளர்கள் சவூதி அரசால் பெறுமதியான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதியான போட்டியாளர்களை தெரிவு செய்யும் ஆரம்பக்கட்டப் போட்டி 2024 டிசெம்பர் மாத ஆரம்பப் பகுதியில் பிராந்திய ரீதியாக நடத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஆளும் தேசிய மக்கள் சக்தியில் இருந்து 20 தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு

(சகாதேவராஜா)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி சார்பில் 20 தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி கட்சி ஊடாக நாடாளுமன்றத்திற்கு செல்கின்ற தமிழ் பிரதிநிதிகள் - 13 பேர், முஸ்லிம் பிரதிநிதிகள் 07 பேர்

இவர்களுள், வடக்கு கிழக்கில் 07 தமிழ் பிரதிநிதிகள் தெரிவாகி உள்ளனர். ஆனால் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் வடக்கு கிழக்கில் தெரிவாகவில்லை.

வடக்கில் ஐந்து தமிழ் பிரதிநிதிகளும், கிழக்கில் 02 தமிழ் பிரதிநிதிகளும் தெரிவாகி உள்ளனர்.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கந்தசாமி பிரபு. இவர் ஒரு கணக்காளர்.

திருமலை மாவட்டத்தில் அருண் ஹேமச்சந்திர. இந்து பிராமணர். பிரபல டாக்டர் ஹேமச்சந்திரவின் புதல்வராவார்.

தேசிய பட்டியலில் இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகிய ஒரேயொரு தமிழ் பிரதிநிதி தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

HIKVISION
DEALER PARTNER PLATINUM

NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North

SPECIAL OFFER



INSTALLATION CHARGE FREE

அனைத்து Camera Package களும் இலவசமாகப் பொருத்திக் கொடுக்கப்படும்.

எங்கும் இல்லாத விலைக் கழிவில்...
இச் சலுகை 30.11.2024 வரைக்கும்

- HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE16D0T-EXLPF (02 YEARS WARRANTY) 4
- 3U 400MM DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 500GB HDD (01 YEAR WARRANTY) 1
- HITECH POWER PACK HT-212HQ 4
- METAL BNC CONNECTOR 8
- 3C 2V COXIAL CABLE 100M 1

**Rs. 45000.00**

- HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE16D0T-EXLPF (02 YEARS WARRANTY) 8
- 3U 400MM DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 500GB HDD (01 YEAR WARRANTY) 1
- HITECH POWER PACK HT-212HQ 8
- METAL BNC CONNECTOR 16
- 3C 2V COXIAL CABLE 100M 1

**Rs. 71000.00**

- HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE10DF0T-PFS (02 YEARS WARRANTY) 4
- 3U 400MM DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 500GB HDD (01 YEAR WARRANTY) 1
- HITECH POWER PACK HT-212HQ 4
- METAL BNC CONNECTOR 8
- 3C 2V COXIAL CABLE 100M 1

**Rs. 51500.00**

- HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE10DF0T-PFS (02 YEARS WARRANTY) 8
- 3U 400MM DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 1TB SURVEILLANCE HARDDISK (01 YEAR WARRANTY) 1
- HITECH POWER PACK HT-212HQ 8
- METAL BNC CONNECTOR 16
- 3C 2V COXIAL CABLE 100M 1

**Rs. 87700.00**

- HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE10DF3T-PF (02 YEARS WARRANTY) 4
- 3U 400MM DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 500GB HDD (01 YEAR WARRANTY) 1
- HITECH POWER PACK HT-212HQ 4
- METAL BNC CONNECTOR 8
- 3C 2V COXIAL CABLE 100M 1

**Rs. 59000.00**

- HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE10DF3T-PFS (02 YEARS WARRANTY) 8
- 3U 400MM DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 2TB SURVEILLANCE HARDDISK (01 YEAR WARRANTY) 1
- HITECH POWER PACK HT-212HQ 8
- METAL BNC CONNECTOR 16
- 3C 2V COXIAL CABLE 100M 1

**Rs. 128000.00**

Follow us: facebook/nalin it www.nalinit.lk nalin@nit.lk

| | | |
|---|---|---|
| JAFFNA | 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna. | 077 766 7975 / 021 222 1121 |
| KILINOCHCHI | No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi. | 076 359 7610 / 021 228 5550 |
| MANNAR | No.208A, Hospital Road, Mannar. | 076 359 4368 / 023 222 2500 |
| NALIN IT EXCLUSIVE | No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC) | 076 359 4359 / 021 221 0404 |

*நிபந்தனைக்குட்பட்டது.

# வைத்தியர் அர்ச்சுனாவுக்கு சாவகச்சேரியில் வரவேற்பு









2024 பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றவைத்தியர்அர்ச்சுனாவை சனிக்கிழமை சாவகச்சேரி மக்கள் வரவேற்றிருந்தனர்.

தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் முதல் தடவையாக வைத்தியர் அர்ச்சுனா சனிக்கிழமை பிற்பகல் யாழ். சாவகச்சேரி சென்றிருந்த நிலையில் மக்கள் அவருக்கு அமோக ஆதரவளித்தனர்

# திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழரசு விருப்பு வாக்குகள்



(சகாதேவராஜா)

திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகள் வருமாறு:

கவிந்திரன் கோடீஸ்வரன் - 11962

கந்தசாமி இந்துனேஷ் -10744

தவராசா கலையரசன் - 5231

கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் -4906

குபேந்திரராஜா ஜெகசுதன் -3216

அருள்ஞான மூர்த்தி நிதான்ஞ்சன் -2950

கனகரத்தினம் ஜனார்த்தனன் - 2254

பேரின்பநாயகம் ஜீவராஜ் -1294

ஜெயக்குமார் யசோதரன் -545

பாக்கியம் மஞ்சுளா -528

இவர்களுள் கவிந்திரன் கோடீஸ்வரன் இரண்டாவது தடவையாக இம்முறை நாடாளுமன்றிற்குத் தெரிவாகி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2015 தேர்தலில் 17791 வாக்குகளை பெற்று நாடாளுமன்றம் தெரிவாகி இருந்தார். 2020 இல் 3800 வாக்குகளை பெற்றிருந்தார். ஆனால் நாடாளுமன்றம் தெரிவாகவில்லை.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் இம்முறை தேர்தலில் தோல்வியுற்றார்.

# ஆவா கும்பலைச் சேர்ந்த இருவர் உட்பட 4 பேர் மட்டக்குளிய பகுதியில் கைது

மட்டக்குளிய பிரதேசத்தில் 16ஆம் திகதி இரவு மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது கடத்தல் சம்பவம் தொடர்பில் தனிப்பட்ட தகவல் வழங்குநரிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் 04 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 24, 26, 27 மற்றும் 32 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் புதுக்குடியிருப்பு, கொட்டாஞ்சேனை, எச்சிலம்பற்று மற்றும் தோப்பூர் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேக நபர்களை கைது செய்து விசாரணை நடத்தியதில் எச்சிலம்பற்று மற்றும் தோப்பூர் பிரதேசங்களில் வசிக்கும் சந்தேகநபர்கள் இருவரும் வடகிழக்கு பகுதியில் சில சம்பவங்களுடன் தொடர்புடைய ஆவா கும்பலைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

மற்றைய இரு சந்தேக நபர்களும் கடந்த ஒக்ரோபர் மாதம் டுபாயில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளனர்.

டுபாயில் உள்ள ஒருவரின் ஆலோசனையின் பேரில் மேற்கண்ட 'ஆவா' கும்பலைச் சேர்ந்த இருவரையும் திருகோணமலையில் இருந்து மட்டக்குளிக்கு அழைத்து வந்ததாக தெரியவந்துள்ளது.

மேற்படி 'ஆவா' கும்பலைச் சேர்ந்த இருவர் துபாயில் உள்ள ஒருவருக்கு 'டிக் டாக்' மூலம் மிரட்டல் விடுத்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் சந்தேகநபர்கள் இருவரையும் பெண் ஒருவர் ஊடாக மட்டக்குளிய பிரதேசத்திற்கு அழைத்து வந்து தாக்கி வீடியோ எடுத்து டுபாயில் உள்ள ஒருவரிடம் காண்பித்துள்ளமை அவர்களின் தொலைபேசி அலசலில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பலம் வாய்ந்த மலையக கட்சிகள் தேர்தலில் படுதோல்வியடைந்தன









(கேதீஸ்)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வரலாற்றில் முதல் தடவையாக தோட்டத் தொழிலாளர் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மலையகத்தில் பலம் வாய்ந்த அரசியல்வாதிகளை விட அதிகளவானவிருப்புவாக்குகளைப்பெற்றுநாடாளுமன்றத்திற்கு பிரவேசித்துள்ளனர்.

பலம்வாய்ந்தஇலங்கைத்தொழிலாளர்காங்கிரஸின் தோட்டத் தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சரவை அமைச்சர் ஜீவன் குமாரவேல் தொண்டமான் இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் 46,438 விருப்பு வாக்குகளையே பெற முடிந்தது.



மேலும், தொழிலாளர் தேசிய சங்க பெருந்தோட்ட தொழிற்சங்கத்தைபிரதிநிதித்துவப்படுத்திநுவரெலியாவில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரன் 48,018 விருப்பு வாக்குகளை மாத்திரமே பெற்றுள்ள அதேவேளை, மற்றொரு சக்தி வாய்ந்த தோட்டத் தொழிற்சங்கமான மலையக மக்கள் முண்ணனியின் தலைவர் வி.இராதாகிருஷ்ணன் இம்முறை 42,273 விருப்பு வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார்.

இந்த வருடம் பதுளை மாவட்டத்திலிருந்து தேர்தலில் போட்டியிட்ட தோட்ட தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த கிட்ணன் செல்வராஜ் மற்றும் செல்வி அம்பிகா சாமுவேல் போன்றவர்கள் பலம் வாய்ந்த அரசியல்வாதிகள் பெற்ற விருப்பு வாக்குகளை விட அதிக எண்ணிக்கையான 60,041 மற்றும் 58,201விருப்பு வாக்குகளை பெற்றுள்ளனர். அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி சிங்கள வேட்பாளராக போட்டியிட்ட தினேஸ் மஞ்சுள சுரவீர ஆராச்சி 78,832 விருப்பு வாக்குகளை பெற்றுள்ளமை நுவரெலியா தேர்தல் வரலாற்றில் தனித்துவமாக மாறியுள்ளது.

# தேசிய மக்கள் சக்தி உண்மையான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும்

## சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்திக்கு வாழ்த்து தெரிவித்து, மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் முழுவிவரம் வருமாறு –

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு வாக்களித்த 65 ஆயிரத்திற்கும்

மேற்பட்ட மக்களுக்கும் வாக்களிப்பில் கலந்துகொண்ட கலந்துகொள்ளாத ஏனைய மக்களுக்கும் எமது நன்றிகள்.

வரலாற்றில் முதன்முறையாக விகிதாசார பிரதிநிதித்துவத்தின்கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குமேல் கொடுத்து ஓர் இடதுசாரி கட்சியை ஆட்சியில் அமர்த்திய மக்களுக்கு எமது வாழ்த்துகள்.

ஆட்சியில் அமர்ந்திருக்கக்கூடிய தேசிய மக்கள் சக்திக்கு பெருமளவிலான சுமை தலைமேல் சுமத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும். புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்க வேண்டும். வெளிநாடுகளில் வாங்கிய கடன்களை அடைக்கத் தொடங்கவேண்டும். உள்நாட்டில் அவர்களை நம்பி வாக்களித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கென பிரத்தியேக பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கி செயற்படுத்த வேண்டும். இவ்வாறு பல பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றன.

இதற்கு மேலதிகமாக சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருளாதாரக் கொள்கைளூபவ் வெளியுறவுக் கொள்கை போன்றவையும் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமானவை.

புதிய அரசாங்கம் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்கள் அனைவரும் இணைந்து அனைத்து கடமைகளையும் செய்துமுடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய அரசாங்கம் முந்தைய ஆட்சியாளர்கள்

வெற்றிக்களிப்பில் திளைத்ததுபோல் அல்லாமல் தனது கடமைகளையும் பொறுப்பையும் உணர்ந்து சரியான திசைவழியில் பயணிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஓர் அதிகாரப்பகிர்விற்காகப் போராடி வந்திருக்கின்றனர். அதற்காக நீண்டகால யுத்தம் ஒன்றும் இந்த மண்ணில் நடைபெற்றது.

எந்தஓர் அரசாங்கத்திற்கும் கொடுக்காத ஆதரவை

வரலாற்றில் முதல்முறையாக வடக்கு – கிழக்குவாழ் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்குக் கொடுத்துள்ளனர். அதுமாத்திரமல்லாமல் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முதன்மைப் படுத்தக்கூடிய ஒன்றாக தேசிய இனப்பிரச்சினை இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதானது இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டியெழுப்பும் என்று நாங்கள் நம்புகின்றோம். – என்றுள்ளது.

# தமிழ்த்தேசியத்துக்கான பயணம் தடைகளைத் தாண்டித் தொடரும்

## சிறிதரன் திடசங்கற்பம்

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், தங்கள் வாக்குகளால் எனக்கு ஆணை வழங்கிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள். மக்கள் ஆணையை மனதார ஏற்று, எனது அறவழி அரசியற் பயணத்தை உறுதியோடு தொடர்வேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர், ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அவரது செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது –

கடந்த 15 வருடகால அரசியற் பயணத்தில் என் ஆத்ம பலமாகவும், அரசியற் பலமாகவும் தம் உடனிருப்பை வழங்கி, கொள்கையின்பாற்பட்ட பயணத்தின் பங்குதாரர்களாக இருந்த உங்கள் ஒவ்வொருவரது கரங்களையும் நன்றியோடு பற்றிக்கொள்கிறேன்.

திட்டமிட்டு பின்னப்பட்ட சதிவலைகளின் உள்ளிருந்தவாறே, தமிழ்த்தேசியத்தின் இருப்புக்காய் போராடத் தலைப்பட்ட என்னையும், எனது பாதையையும்எமதுமக்கள்ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்ற நிறைவே, எனது அரசியற் பணியையும் பயணத்தையும் இன்னும் வலுவூட்டும்.

என்னுள் நானாக இருந்து என்னை இயக்கும் எங்கள் தேசத்தில் விதையுண்ட ஆத்மாக்களின் அரூப பலத்தோடு, என் மக்களுக்கான தமிழ்த்தேசியப் பயணத்தைதடையற்றுத்தொடர்வேன். நிலையிழக்க வைத்த அலைகளின் நடுவே தமிழ்த்தேசியக் கொள்கைக்கு கிடைத்த இந்த வெற்றி கார்த்திகையின் கனதியை உறுதி செய்யட்டும் – என்றுள்ளது. (113)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.11.2024இல் வெளியிடப்பெற்றது